சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை – அங்கன்வாடி மையப் பணிகள் – அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் முதன்மை அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு மாற்று ஏற்பாடுடன் உணவூட்டும் பணிகளை மேற்கொள்வது – கோடை விடுமுறை வழங்குவது – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டச் சந–7(1) துறை

அரசாணை (நிலை) எண்.36

நாள் 10.04.2018
திருவள்ளுவராண்டு 2049
ஹேவிளம்பி, பங்குனி 27
படிக்கப்பட்டது:

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரின் கடித ந.க.எண்.3953/இ3–2/2017, நாள் 13.11.2017.

+++++

ஆணை:–

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர், பல்வேறு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கங்களின் கடிதங்களில், தொடக்கப்பள்ளியில் 5 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ஆண்டுக்கு 220 நாட்களும் உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு 210 நாட்கள் வேலை நாட்களாக தமிழக அரசு அறிவித்துள்ளதாகவும், தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு மே மாதம் கோடை விடுமுறை வழங்கப்படுவதாகவும், அரசு உதவி பெறாத 5 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகள் பயிலும் நர்சரி பள்ளிகளுக்கும் மே மாதம் கோடை விடுமுறை அளிக்கப்படுவதாகவும் சத்துணவு மையங்களுக்கும் கோடை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாகவும், அங்கன்வாடி மையங்களுக்கு மே மாதம் கோடை விடுமுறை அளிக்கப்படாததால் 2–5 வயது குழந்தைகள் மனநிலை ரீதியாகவும், இயற்கையின் தாக்கத்தாலும் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருவதாக தெரிவித்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், மையம் நடத்துவதில் பல்வேறு சிரமங்களை அங்கன்வாடி ஊழியர்களும் சந்தித்து வருவதாகவும், பொதுவாக குடும்பத்தில் 5 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் பள்ளி விடுமுறை நாட்களில் வீட்டில் ஓய்வாக இருக்கும் போது 2–5 வயதில் உள்ள அங்கன்வாடியில் பயிலும் குழந்தைகளை மையத்திற்கு அனுப்புவதை பெற்றோர்கள் தவிர்த்து வருகின்றனர் என்றும், ஒரு குழந்தைக்கு மற்றொரு குழந்தை துணையாக வீட்டில் இருப்பதை பெற்றோர்கள் விரும்புகின்றனர் என்றும், கோடை விடுமுறையில் குடும்பத்துடன் சுற்றுலா செல்வது, உறவினர் வீட்டிற்கு செல்லும் பழக்கம் தமிழகத்தில் உள்ளதால் அக்குடும்பங்களில் அங்கன்வாடியில் பயிலும் குழந்தைகளை அழைத்துச் செல்வது தவிர்க்க முடியாததாகிறது என்றும், அக்காலகட்டத்தில், அங்கன்வாடி மையங்களை நடத்துவது அங்கன்வாடி ஊழியர்களுக்கு சிரமமாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், தமிழ்நாட்டில் மே மாதம் 2–வது வாரம் அங்கன்வாடி பணியாளர்களுக்கும், 3–வது வாரம் அங்கன்வாடி உதவியாளர்களுக்கும், குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு 4–வது வாரம் கோடை விடுமுறை (குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு கோடை விடுமுறை

வழங்கும் நாட்களில் முதன்மை அங்கன்வாடி பணியாளர்கள் அம்மையங்களை கூடுதல் பொறுப்பு பார்க்க வேண்டும்) வழங்குவது தொடர்பாக கருத்துருவை பரிந்துரைத்து அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

**3.** ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த அரசு கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஆணைகள் வெளியிடுகிறது.

i. தமிழ்நாட்டில் அங்கன்வாடி மைய பணிகளின் கீழ் பணிபுரியும் அங்கன்வாடி ஊழியர்களான முதன்மை அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஒவ்வோராண்டும் மே மாதம் இரண்டாவது வாரமும், அங்கன்வாடி உதவியாளர்களுக்கு மூன்றாம் வாரமும், குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு நான்காவது வாரமும் கோடை விடுமுறை வழங்கப்படுகிறது.

ii. அவ்வாறு அங்கன்வாடி மையங்களில், கோடை விடுமுறை வழங்கும் நாட்களில் இரண்டாவது வாரம் அங்கன்வாடி உதவியாளர்களும் மூன்றாவது வாரம் முதன்மை அங்கன்வாடி பணியாளர்களும் நான்காவது வாரம் அருகாமையில் உள்ள குறு அங்கன்வாடி மையங்களில் முதன்மை அங்கன்வாடி பணியாளர்களும் மையப் பயனாளிகளுக்கு உணவூட்டும் பணிகளை எவ்விதமான இடையூறுமின்றி நிறைவேற்றும்படி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

iii. அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் (ம) அங்கன்வாடி உதவியாளர்களுக்கு மே மாதத்தில் விடுமுறை வழங்குவது தொடர்பாக உணவூட்டும் பணிகளை மாற்று ஏற்பாட்டுடன் மேற்கொள்ளும்போது அங்கன்வாடி மையங்கள், அரசின் கொள்கை முடிவின்படி வருடம் முழுவதும் இயங்குவதை உறுதிபடுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை–600 113
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/மாவட்ட திட்ட அலுவலர்கள்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் வழியாக
நகல்
மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட(சந–2) த்துறை, சென்னை –600 009
இருப்பு கோப்பு /உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஆர். எல். சுந்தரி
10/04/2018
பிரிவு அலுவலர்